எ.ம..சா.1 சுரேஷ். E.A.409/2014 in EP.45/2013 in OS.343/2010 22.07.2019

சாட்சி ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

மனுதாரர், கோவிந்தசாமியுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தப்படி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு கோவிந்தசாமி செலுத்த வேண்டிய தொகையை செலுத்தியிருக்கிறார் என்றால் இந்த மனுவிற்குப் பிறகுதான் தெரியும். மனுதாரர் தமிழ்நாடு சிறுதொழில் முதலீட்டுக் கழகத்திற்கு 2006ம் ஆண்டில் தொகை செலுத்திய விபரத்தை இந்த மனுவிற்கு பிறகு தெரிந்து கொண்டேன். கோவிந்தசாமி மீது பூங்கொடி என்பவர் 2006ம் ஆண்டு தாக்கல் செய்த வழக்கில் கோரியபடி மனுதாரர்தான் தொகையை செலுத்தியிருக்கிறார் என்ற விபரம் தெரியும். மனுதாரர், கோவிந்தசாமிக்கு அட்வான்சாக ரூ.1 லட்சம் செலுத்திய விபரமும் இந்த மனுவிற்குப் பிறகுதான் தெரியும். மனுதாரரும், கோவிந்தசாமியும் மீதி கிரய தொகையை 15 மாதங்களுக்குள் செலுத்தி கிரயம் செய்து கொள்ள வேண்டுமென்று ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட விபரமும் இந்த மனுவிற்குப் பிறகுதான் தெரியும். மனுதாரர், கோவிந்தசாமி மீது ஈரோடு, முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.43/2007 என்ற வழக்கை தாக்கல் செய்து 19.06.2007 தேதியில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பான விபரமும் இந்த மனுவிற்குப் பிறகுதான் தெரியும். அந்த தீர்ப்பின்படி மனுதாரர் EP.28/2007 மனுவை தாக்கல் செய்து 09.06.2008 தேதியில் கிரயப் பத்திரத்தை எழுதி வாங்கியிருக்கிறார் என்ற விபரமும் இந்த மனுவிற்குப் பிறகுதான் தெரியும். அந்தக் கிரயத்திற்குப் பிறகு E.P.10/2015 மனுவின் மூலம் கிரயச் சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர் பெற்ற விபரமும் இந்த மனுவிற்குப் பிறகுதான் தெரியும். அந்த E.P.10/2015 மனுவானது 30.09.2015 தேதியில் முடிவுக்கு வந்த விபரமும் இந்த மனுவிற்குப் பிறகுதான் தெரியும். நானும், கோவிந்தசாமியும் கடந்த 12.12.2007 தேதியில் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம். நான் தாக்கல் செய்த வழக்கு எண் ஞாபகமில்லை. நான் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கில் 2013ம்ஆண்டு தீர்ப்பளிக்கப்பட்டது. நான் வழக்கை தாக்கல் செய்தபோதே மனுதாரர் மற்றும் கோவிந்தசாமிக்கிடையே கிரய ஒப்பந்தம் ஏற்பட்டிருந்த விபரமும், மனுதாரர் தீர்ப்பு பெற்றிருந்த விபரமும் எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல. நிறைவேற்று மனுவை தாக்கல் செய்வதற்கு முன்பு வில்லங்கச் சான்று பெற்று தாக்கல் செய்யவில்லை. நிறைவேற்று மனுச் சொத்தைப் பொருத்து வில்லங்கம் எதுவும் உள்ளதா என்று தெரிந்து கொள்ள நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மனுதார் இந்த மனுவை தாக்கல் செய்த பிறகு, அவர் பெற்ற தீர்ப்பு செல்லாது என்று வேறு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை, இன்று வரை வேறு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

அதனால் மனுதாரர் பெற்ற தீர்ப்பு இன்று வரை நடைமுறையில்தான் உள்ளது என்றால், நான் எந்த நடவடிக்கையும் அந்த தீர்ப்பை பொருத்து எடுக்கவில்லை. மனுச் சொத்தை பொருத்து ஆவணங்களில் பெயர் மாற்றம் எதுவும் செய்யக்கூடாது என்று வருவாய்த் துறைக்கு மனு கொடுக்கவோ தனியாக வழக்கு தாக்கல் செய்யவோ இல்லை. மனுதாரரின் கிரயத்தை தவிர்க்க வேண்டுமென்பதற்காகவே நானும், கோவிந்தசாமியும் கூட்டாக மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மனுதாரரின் கிரயம் பற்றி தெரிந்து கொண்ட பிறகு மனுதாரருக்கோ, கோவிந்தசாமிக்கோ அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. மனுதாரர், 7 வருடங்கள் கழித்து சுவாதீனம் எடுத்துக் கொண்டது Art.134 காலவரையறைச் சட்டப்படி செல்லாது என்று சொல்லியிருப்பது தவறானது என்றால் சரியல்ல. நான் மனுச் சொத்தைப் பொருத்து பெற்ற கிரயம் நல்லெண்ணக் கிரயம் அல்ல என்றால் சரியல்ல. மனுதாரர் மற்றும் கோவிந்தசாமிக்கு இடையே ஏற்பட்ட கிரய ஒப்பந்தம் உண்மையான ஒப்பந்தம் என்றால் சரியல்ல. மனுதாரர் பெற்ற தீர்ப்பை ரத்து செய்யாமல், நான் எதிர்வாதம் செய்து வருவதே தவறானது என்றால் சரியல்ல. மனுதாரர் சட்டப்படி கிரயம் மற்றும் சுவாதீனம் பெற்றிருப்பதால் மனுவில் கோரியபடி உத்தரவாக வேண்டுமென்றால் சரியல்ல.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:- இல்லை

<u>மறு விசாரணை:- இல்லை.</u>